# காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சி

நாள் 22.04.2010

## அவசரக்கூட்டம்

காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சியின் அவசர கூட்டம் 23.04.2010-ம் தேதி மாலை 4.30 மணிக்கு நகராட்சி மன்ற கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்ற தலைவர் திரு.வாவு சா.செய்யிது அப்துர் ரஉற்மான் அவர்கள் தலைமையில் நடைபெறும். எனவே உபதலைவர் மற்றும் உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்

பொருள் எண் 1

காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சிக்கு இரண்டாவது புதிய தனி குடிநீர் திட்டத்தினை ரூ. 30 கோடியில் நகராட்சி நிர்வாக இயக்குநரால் நகராட்சியின் கோரிக்கையின் பேரில் நியமிக்கப்பட்ட மெஸர்ஸ். வாப்கோஸ் லிமிடெட். சென்னை கலந்தாலோசகர் மூலம் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் அங்கீகரிகும் தீர்மானம்

அலுவலக குறிப்பு

இத்திட்டத்தினை ரூ. 30 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்திடவும் மத்திய மாநில அரசுகளிடமிருந்து உரிய மானியம் நகராட்சி பங்களிப்பு மற்றும் ஏதேனும் ஒரு நிதி நிறுவனத்திடம் கடன் பெற்று இத்திட்டத்தினை செயல்படுத்திடவும் மன்றம் அங்கீகரிக்கலாம. இதற்கான பிரேரணையை நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலம் டுபிட்கோ நிறுவனத்திற்கு அனுப்பவும் அவர்களது அறிவுரையின் படி குடிநீர் இணைப்பு விலை வீதம் மற்றும் வைப்பு தொகையில் மாறுதல் மேற்கொள்ளவும் முடிவெடுக்கலாம்

தீர்மானம் எண் 695

ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது

(ஒப்பம்) வாவு. சா. செய்யிது அப்துர் ரஹ்மான்
தலைவர்,
மூன்றாம் நிலை நகராட்சி,
காயல்பட்டணம்.